உ

சிவமயம்



இது

யாழ் / வடமராட்சி

தென் துன்னையம்பதி

சந்திரவளவைச் சேர்ந்த

திருமதி

# கமலாதேவி பரம்சோதி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின்

அமரத்துவம் குறித்த

# நினைவுக் கலசம்

16-12-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி கமலாதேவி பரம்சோதி

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

தோற்றம்:
**29. 11. 1937**

மறைவு:
**02. 11. 1995**

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டுயுவ ஐப்பசிசேர் ஆர்ந்தபதி னாறுவரு
பூண்ட வியாழனுயர் பூர்வபக்கம் — காண்தசமி
மாதேவி நற்கமலா ஆசிரியை போய்ச் சேர்ந்தாள்
பூதேஸ்வரன் தாளைப் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறைப் பாக்கள்

## தேவாரம்

மீளாவடிமை யுமக்கே யாளாயப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போலுள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கு மடியார் தங்களல்லல் சொன்னக் கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதிரே.

## திருவாசகம்

உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் கற்பனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பானித் தெருவே
ஐயா நீயுலாப் போந்த அன்று முதலின்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத் திரைபோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தாரமர் குழாத்திலணி யுடையாதிரை நாள்
நாராயணனொடு நான்முகனங்கி யிரவியு மிந்திரனும்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கடிசை யனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தை கெடப்புகலியர் கோனமுது செயத்திரு முலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல் போற்றி.

## திருப்புகழ்

மாதர்வச மாயுற்றுழல்வாரும் மாதவமெணாமற்றி ரிவாரும்
நீதகல வோதிப் பணியாரும் நீநரக மீதிற்றிகழ்வாரே
நாதவொளியே நற்குணசிலா நாரியிருவோரைப் புணர்வோனே
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில் கதிர்காமப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யான் கண்ட கமலா

(முன்னாள் அதிபர் க. நடராசா கைலை)

கமலா என்பது இவரின் செல்லப் பெயர் இயற்பெயர் கமலாதேவி. கமலா ஒரு தேவிதான் இத்தேவு எம் கட்பொறிகளுக்கு விடயமாகாது தேகவியோகமாகி விட்டது இங்ஙனம் மறைந்து சென்றோர் எத்தன்மை உடையோராயினும் அவர்களை ஏத்திப் போற்றுதல் உபசார வழக்கு. அவ்வாறு முகமன் பேச நான் முற்படவில்லை. உள்ளனவற்றை உள்ளவாறு திரிக்காது உரைக்கின்றேன்.

இவ்வம்மையார் பன்னீராண்டுக்கு மேலாக துன்னாலை தெற்கு அ. த. க. பாடசாலையில் எனது உதவி ஆசிரியர் குழாத்தில் ஒருவராகச் சேவையாற்றியவர் யான் அக்காலை அதிபராகப் பணி புரிந்தேன். இஃது அன்னாரின் குணகுணங்களை நன்கு அறிவதற்குக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பம் எனவே அவரின் குண நலன்களில் ஒன்றிரண்டைக் குறிப்பிட விளைகின்றேன்.

இவ்வாசிரியையிடத்துக் குணத்தை மாத்திரம் நான் கண்டதேயல்லாமல் அகுணத்தைக் காணவில்லை. ஒருவேளை அவரிடமிருந்த குண நலன்கள் அகுணங்களை விழுங்கி விட்டனவோ தெரியாது. இவர் ஒரு சித்த சுத்தியையுடைய நல்லாசிரியை. அவரிடம் அத்துவிதமாக அமையப்பெற்ற அடக்கம் அறிவு, ஆற்றல், ஆதாரம், ஆதியாம் பண்புகளை வேறெப் பிறவிகளிடத்தும் காண்பது அரிது. இவை அனைத்தும் இக்கமலாவுக்குத் தனிச்சொத்து.

எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதிற் பகீரதி. பொறுமையில் பூமிதேவியை வெற்றிகொண்ட புகழரசி, கள்ளங் கபடமறியாத புனிதவதி இவர் தக்காரோ தகவிலரோ என்பதற்கு அவரின் எச்சங்களே சான்று பகரும் இல்லற மணி விளக்கு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மங்கையர் திலகம். இவர் மாட்டு அறிந்தறியாது ஒரோவழி சினம் மீதூரப்பெற்றால், அஃது அப்போதே நீர்கிழிய எய்த வடுப்போலாகிவிடும்.

பரந்த அறிவு, பண்பட்ட உள்ளம், உயர்ந்த நோக்கு சின்னஞ் சிறார்களைக் கற்பிக்கும்போது அஃதோர் மாதிரிப் பாடமாகக் காட்சிதரும். அன்பான சொல், ஆதரவான அரவணைப்பு, மாணவரின் நன்மதிப்பை மிகமிகப் பெற்றவர். இவரின் பெருமை எட்டிலடங்கா. சொல்லச் சொல்ல நீண்டு செல்லும். நடப்பது நடந்தாகிவிட்டது. அன்னாரின் ஆன்மா சாந்திபெற்று உய்திபெற இறைவனை வழுத்துவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கனுல் இடருற்ற வெண்ணி லாவைத்
தலைக்கோல மாயணிந்த தலைவா போற்றி
முக்கண்ணும் புயம்நாலும் முகமும் ஐந்தாய்
முதுமறைக்கு மெட்டாத முதல்வா போற்றி
எக்கண்ணும் எப்போதும் எல்லோர் மாட்டும்
எளிமையுடன் செம்மையொடு பழகி வந்த
தொக்கபுக ளொருங்கு பெற்ற கமலாதேவித்
தோகைதனை நின்னடிக்கீழ் இருத்து தேவே.

## தேற்றம்

முடிசார்ந்த மன்னருடன் முனிவர் கூட
முடிவின்றி வாழ்ந்தகதை இங்கே யில்லை
பிடிசாம்ப ராகின்ற உடலைக் கட்டிப்
பிடித்திங்கு கதறுவதில் பெருமை யில்லை
நடிகரப்பா நாங்கள் இந்த நானிலத்தில்
நல்லீசன் கழலிணைக்கே பாதம் வையின்
தம்கடமை முடிந்தவர்கள் முன் செய்யட்டும்
நம்கடமை முடியட்டும் நாமும் போவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

- சி. முருகேசு தம்பதியினர் + செல்லாச்சி
  - கனகம்மா + நாகரட்ணம்
  - கமலாதேவி + பரம்சோதி
    - பாலநந்தினி + மகேந்திரன்
      - நீலவாணன்
    - பாலகௌரி (நோர்வே) + ஜீவராசா
      - ரஜீபன்
    - பாலபவான்
    - பாலகரன்
    - பாலகணேஸ்
  - வல்லிபுரநாதன் (அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

எங்கள் அகவிளக்காய்
எல்லோர்க்கும் இனியவளாய்
தேவிவடி வெடுத்த
மாசில்லா ஒளி நிலவாள்
கமலா அவள் நினைவில்
காலமெலாம் நனைகின்ற
இங்கிதத்து நண்பர்க்கும்
இனிய எம்முறவினர்க்கும்
பங்கமிலா பரிவினர்க்கும்
பகர்கின்றோம் நன்றி பல.

— நன்றிகள் —

சந்திரவளவு,
தென் துன்னையம்பதி,
கரவெட்டி.
16. 12. 1995.

இவ்வண்ணம்
செ. பரஞ்சோதி
குடும்பத்தினர்.

தமிழ்ப்பூங்கா அச்சகம் – நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org